1979 மார்ச் 22]

நாகை புறநகர் அமைக்கும் திட்டம் வீட்டு வசதி வாரியத் திடம் உள்ளது. இத் திட்டத்தின்படி நாகையில் 11.25 ஏக்கர் நிலத்தை ரூ. 11.48 இலட்சம் செலவில் கையகப்படுத்தி, அவ் வாறு கையகப்படுத்தப்பட்ட நிலத்தைக் குடிநீர் வசதி, மின் வசதி, சாலை வசதி மற்றும் பல வசதிகளுடன் மேம்படுத்தி வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் நாகையில் 262 வீடுகள் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும் வேளாங் கன்னியில் 164 வீடுகள் மீனவர்களுக்கும் ரூ. 40.17 இலட்சங்கள் செலவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

கோவை தொழிலாளர் மையப் படிப்பகம்

*வினா எண். 507—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை போன்ற பெரிய தொழிலாளர் மையத்துக்கு மேலும் ஒரு படிப்பகம் ஏற்படுத்தும் உத்தேசமுள்ளதா ?

(ஆ) விஞ்ஞானம், தத்துவம், கலை, இலக்கிய புத்த கங்களையும் போடும் திட்டமுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) தற்சமயம் இல்லை.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சர்களுக்கு நன்றாகத் தெரியும், சென்னைக்கடுத்தப்படியாக, ஒரு பெரிய ஒர்க்கிங் கிளாஸ் சென்டர் கோயம்புத்தூர். வசூலிக்கப்பட்டி ருக்கக்கூடிய அந்தப் பணம் ஏராளமாக கையிலே இருக்கிறது. அந்த இடத்தில் தொழிலாளர்கள் புத்தி கூர்மையோடு விஷயங்களைக் கற்றுக்கொள்ள ஒரு நல்ல லைப்ரரி—மத்திய லைப்ரரியாக ஏற்படுத்த—நூலகம் ஏற்படுத்த ஏன் திட்டம் போடப்படவில்லையென்பதை நான் கேட்கவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது படிப்பகம் ஒன்று ஏற்கெனவே இருக்கிறது. மேலும் தேவை என்று சொன்னால், நமது மாண்பு மிகு உறுப்பினர் அருமை நண்பர் திரு. உமாநாத் அவர்களை உறுப்பினராக கொண்ட 20 பேர் அடங்கிய குழு ஒன்று இருக் கிறது. அவர்கள் மூலமாகவே இதைக் குழுவில் கொண்டு வந் தால் முடிவு எடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1979 மார்ச் 22

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நடவடிக்கைகளைப் பற்றி பரிசீலனை செய்து தீர்மானங்கள் எடுப்பதற்கு குழு ஒன்று இருக்கிறது என்பது உண்மை, அது எனக்குத் தெரியும். நான் கேட்பது அது அல்ல. அரசாங்கம் இப்படி ஒரு நிதியை உருவாக்கி லட்சக்கணக்கான பணம் சேர்த்துக் கொள்ளும்போது அந்தத் தொழிலாளர்களுக்கு உபயோகப்படும் முறையில், அறிவுத் துறையிலும், விளையாட்டுத் துறையிலும், தேகப் பயிற்சி துறையிலும் இப்படி பல துறைகளிலும் பயன்படுத்த வேண்டும் என்ற அடிப்படை நோக்கமே அரசாங்கத்திற்கு இல்லையா ? அப்படி ஒரு தீர்மானத்தை உறுப்பினர் குழுவின் மெம்பர் இருக்கிறார்கள், அவர்கள் சொல்லட்டும் என்று இருப்பது சரியா ? அமைச்சர் அவர்கள் தொழிலாளர்கள் சங்கத் தலைவர் ஆக இருந்திருக்கிறார்கள். அவர்களே முன் நின்று இதைச் செய்யக்கூடாதா என்று கேட்க விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன்—தற்பொழுது இயங்கி வரும் இந்த படிப்பகத்தை நடத்துவதற்கு ரூ. 2,648.20 வருடாந்திரச் செலவாகிறது. மேலும், தேவை என்பது பற்றி தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். குழுவில் கொண்டு வரவேண்டும் என்பது முறை. அவர்கள் தான் இதைக் கொண்டு வரவேண்டும். அடுத்து ஸ்போர்ட்ஸ் பற்றி சொன்னார்கள். You know I am a sportsman. ஆகையால் தமிழ்நாடு பூராவிலும் ஸ்போர்ட்ஸ் நடக்கப்போகிறது. சென்னையிலும் Final meet will be here you will be invited; and you can be rest assured about it.

திரு. சி. ஆறுமுகம் ; தலைவர் அவர்களே, அமைச்சருக்கு அடிக்கடி ஆங்கிலத்தில் பேசிப் பழக்கம். ஆங்கிலத்தில் பேசுகிறார்கள். ஸ்போர்ட்ஸ் தெரியும் என்று சொன்னார். கோல் விளையாட்டு தெரிந்தவருக்கு ஸ்போர்ட்ஸ் தெரியும். திரு. ரமணி அவர்கள் கேட்டது, அந்தத் துறைகளில் ஸ்போர்ட்ஸ் கொண்டு வருவதற்கு அரசு உதவுமா ? அமைச்சர் அவர்களே, ஸ்போர்ட்ஸ் தெரிந்த அமைச்சர் அவர்களே, முன் நின்று அதை ஏற்பாடு செய்ய முன் வருவாரா என்று கேட்கிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி என்னவென்று சரியாகப் புரியவில்லை. திரு. ஆறுமுகம் அவர்களை மறுபடியும் சொல்லும்படி கேட்டுக் கொள்கிறேன்.

1979 மார்ச் 22]

திரு. சி. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கேள்வி புரியவில்லை என்று மீண்டும் சொல்லும்படி கேட்டார்கள். அமைச்சர் அவர்கள் ஆங்கிலத்தில் பேசுகிறார்கள் என்று சொன்னேன். அமைச்சர் அவர்கள் தொழிலாளர்கள் சங்கத் தலைவர் ஆக இருந்தவர். ஸ்போர்ட்ஸ் மேன். கோல் விளையாட்டில் (குச்சி விளையாட்டு) தேர்ச்சி பெற்றவர் என்று கேள்விப் பட்டேன். அமைச்சர் அவர்கள் வெளியூர் போயிருந்தபோது அதை விளையாடியதாகவும் கேள்விப் பட்டேன், ஆகையால் அமைச்சர் அவர்களே இப்படிப் பட்ட விளையாட்டுகளை ஏற்பாடு செய்ய முன் வருவாரா என்று கேட்டேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கேள்விக்கு, நான் 23 ஆண்டுகள் ஸ்டேஷன் மாஸ்டராக பணி புரிந்திருக்கிறேன். அதனால் ஆங்கிலத்தில் பேசுவது பழக்கமாகி விட்டது. மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து விளையாட்டைப் பற்றி கேட்டார்கள். நான் சிலம்பம் என்று சொல்லப்படும் (Fencing என்று ஆங்கிலததில் சொல்வார்கள்) விளையாட்டைக் கற்றுக் கொண்டேன். இப்பொழுதுதான் 60 வயதிற்கு மேல் ஆகிவிட்டது. சிலம்பம் விளையாடக் கூடாது என்று டாக்டர்கள் சொல்லிவிட்டார்கள். ஆனால் இப்பொழுது கூட யாரும் என்னிடம் நெருங்க முடியாது, கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும், கையில் கோல் இருந்தால் என்று சொல்லிக் கொள்கிறேன். அடுத்து அந்தப் பணத்தைக் கொண்டு தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு தமிழ்நாடு பூராவும் ஸ்போர்ட்ஸ் நடத்த வேண்டும் என்று ஏற்பாடு இருக்கிறது. பைனல் மீட் சென்னையில் நடத்த ஏற்பாடு இருக்கிறது. அப்பொழுது நீங்கள் எல்லோரும் கேட்டிருக்கிற காரணத்தால், இம் மாமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் அரசு அழைப்பு அனுப்பி வைக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தீ. சு. நல்லதம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டு விளையாட்டை எந்த முறையிலே எப்படி நடத்தப் போகிறார்கள் என்று சொன்னார்கள். அதற்கான இடம் சென்னையிலே எங்கே இருக்கிறது. சென்னையில் இருக்கிற நேரு ஸ்டேடியம் விளையாட்டைத் தவிர எதற்கும் கொடுக்கக்கூடாது என்று இருந்தாலும் இங்கே இருக்கிற அதிகாரிகளின் ஏற்பாட்டால் பல நிகழ்ச்சிகளுக்கு கொடுக்கப்பட்டு அந்த ஸ்டேடியம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அதை அடுத்த ஆண்டு எங்கே நடத்த திட்டம் போட்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

[1979 மார்ச் 22

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அது கல்வி இலாகா அமைச்சர் அவர்களை கேட்க வேண்டும். நான் சொன்னது லேபர் வெல்பேர் பண்டில் இருந்து இதை நடத்தவிருக்கிறோம் என்று சொன்னேன். இடம் வேண்டும் என்றாலே நிறைய இருக்கிறது. நமது அமைச்சர் சகோதரரிடம் கேட்டே அந்த இடத்தையே சீர்செய்து கொடுக்கச் சொல்லி கூட பெற்றுக் கொள்ளலாம் என்று உறுதியாக நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : படிப்பகத்தை விட்டு விட்டு எங்கேயோ போய் விட்டீர்கள்—சம்பந்தம் இல்லாமல்.

திரு. தீ. சு. நல்லதம்பி : தலைவர் அவர்களே, இது ஸ்போர்ட்ஸ், வெறும் விளையாட்டுதானே.....

கிருஷ்ணகிரியில் பாதாள சாக்கடை அமைப்புத் திட்டம்

*வினா எண். 508— திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி நகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

[முற்பகல் 9-20]

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திலே உள்ள கிருஷ்ணகிரி நகராட்சி மிகவும் சிறந்த இடம். மக்கள் தொகை பெருகி வரும் நிலை இருக்கிறது. அங்கே பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் மிகவும் தேவை. ஆகவே, அரசு அதைச் செய்ய முயற்சி செய்யுமா ?